நகர்மன்றம்,
போடிநாயக்கனூர் , நாள்.20.05.2022

2022ம் ஆண்டு மே மாதம் 20.05.2022ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்–1 :**

நகர்மன்றத் தீர்மானம் எண்.16, நாள்.11.04.2022–இன் படி அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.30.03.2022 மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 வழிகாட்டுதல்களின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 2022–2023 ஆம் நிதியண்டின் முதல் அரையாண்டு (01.04.2022) முதல் பொது சொத்துவரி சீராய்வு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

மண்டல அடிப்படை மதிப்பில் நிர்ணயம் செய்யப்பட்டமைக்கும் காலிமனையிடத்திற்கு 100 சதவீதம் வரி உயர்வு செய்தமைக்கு ஆட்சேபணைகள் ஏதும்மிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்கு எழுத்து பூர்வமாகவோ / நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு, பொது சொத்துவரி சீராய்வு குறித்து பொதுமக்கள் அறியும் வகையில் 13.04.2022 ஆம் நாளன்று தினமலர் , மதுரை மணி மற்றும் AfterNoon ஆங்கில நாளிதழில் செய்தி வெளியிட்டும் மற்றும் அலுவலக விளம்பரப்பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பொது மக்கள் மற்றும் இதர தொழில் நிறுவனங்களிடமிருந்து பொது சொத்துவரி / காலிமனை சீராய்வு குறித்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. மேலும், இரு கோரிக்கை மனு மட்டுமே வரப்பெற்றுள்ளது. மேற்படி கோரிக்கை விண்ணப்பத்தில் சொத்துவரி சீராய்வு செய்ய வேண்டாம் என கோரப்பட்டுள்ளது. மேற்படி பொது மக்களின் கோரிக்கை ஏற்படையதாக இல்லை. எனவே அரசு வழிகாட்டுதலின்படி நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் காலிமனையிடத்திற்கு 01.04.2022 முதல் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளவும், நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மெற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

நகர்மன்றத் தீர்மனம் எண்.16, நாள்.11.04.2022 இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பினை 01.04.2022 முதல் சொத்துவரி பொது சொத்துவரி / காலினைவரி சீராய்வு மெற்கொள்ள மன்றம் ஊர்ஜிதம் செய்யலாம்.

**(ந.கஎண்.0786/2022/அ1)**

**தீர்மான எண் :** 51 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–2:**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–2420/2019/தி6, நாள்–28.03.2022–ன்படி, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர்

தொகுதி மேம்பாட்டுத்திட்டம் **2019–20** ன் கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிவிபரம்** | **தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி சுப்புராஜ் நகர் சிட்னி விளையாட்டு மைதானத்தில் நடைபாதை அமைக்கும் பணி | ரூ.15.00/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு **29.04.2022**ம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி சுப்புராஜ் நகர் சிட்னி விளையாட்டு மைதானத்தில் நடைபாதை அமைக்கும் பணி | ரூ.15,00,000/– | M/S.KMC ASSOCIATES,தேனி. | (-)0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. முரளிதரன், தேனி. | 0.60% மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட(-) **0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES, தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். **0441/2022/இ1)**
**தீர்மான எண் :** 52– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

- **<u>பொருள் எண்–3:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் கல்விநிதியின் கீழ் , நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **02.05.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு 7வது பகுதி நகரவைப்பள்ளியில் வடக்கு பக்கம் உள்ள பள்ளியின் | ரூ.10,00,000/– | திரு. L..எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 1.25% மதிப்பீட்டை விட கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கூரை அமைத்தல் மற்றும் மேற்கு பக்கமும்,கிழக்கு பக்கமும் மேல்தளத்தில் புதிதாக ஒடுகள் அமைக்கும் பணி | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.04%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதிரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 0627/2022/இ1)
**தீர்மான எண் :** 53 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–4:**

தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (NULM ) 2021–22ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.72.92 இலட்சத்தில் விற்பனை வண்டிகள் வாங்கி வழங்கும் பணிக்கான 11.05.2022ம் தேதிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை மாலை மலர் தமிழ் நாளிதழ் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில தினசரி நாளிதழில் 26.04.2022ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு Accord Advertising Agencies,Chennai-34 நிறுவனத்திற்கு ரூ43,260/–னை விளம்பர கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 0873/2022/இ1)
**தீர்மான எண் :** 54– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–5:**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–249/2022/தி6,நாள்–12.04.2022–ன் படி, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிவிபரம் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–20 தென்றல் நகரில் சமுதாயகூடத்திற்கு சமையல் கூடம் மற்றும் ஆண் ,பெண் கழிப்பிடம் கட்டுதல் | ரூ.15.00/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு 12.05.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–20 தென்றல் நகரில் சமுதாயகூடத்திற்கு சமையல் கூடம் மற்றும் ஆண் ,பெண் கழிப்பிடம் கட்டுதல் | ரூ.15,00,000/– | M/S.KMC ASSOCIATES,தேனி. | மதிப்பீட்டை விட (0.004%) கூடுதல் |
| | | | திரு. முரளிதரன், தேனி. | மதிப்பீட்டை விட (0.013%) கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1170 /2022/இ1)

**தீர்மான எண் :** 55 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–6:</u>**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–249/2022/தி6,நாள்–12.04.2022–ன் படி, போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2021–22 ன் கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிவிபரம்** | **தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–2 ஜமீன் தோப்பு தெருவில் நியாய விலைக்கடை கட்டுதல் | ரூ.15.00/– |

அதன் படி மேற்காணும் பணிக்கு 12.05.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்–2 ஜமீன் தோப்பு தெருவில் நியாய விலைக்கடை கட்டுதல் | ரூ.15,00,000/– | M/S.KMC ASSOCIATES,தேனி. | மதிப்பீட்டை விட (0.004%) குறைவு |
| | | | திரு. முரளிதரன், தேனி. | மதிப்பீட்டை விட (0.020%) கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

(ந.க.எண். 1171/2022/இ1)
**தீர்மான எண் :** 56 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

- **பொருள் எண்–7:**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண் 5990/2022/SBM ,நாள்.11.04.2022ன் படி , Swachh Bharat Mission (Urban) 2.0ன் கீழ், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பொதுக்கழிப்பிடம் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ,பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1172/2022/இ1)
**தீர்மான எண் :** 57 – ரூ.35.00/– இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு என்பது ரூ.36.28/– இலட்சம் என திருத்தி வாசிக்கப்பட்டது.
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

- **பொருள் எண்–8:**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021–2022–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில் அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring System) நிறுவும் பணியினை ரூ,46.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.17021–2 /2021/EA-1, நாள்.14.12.2021 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டு, நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு 06.05.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் 5 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/s. Swaraj Equipment Pvt ltd,Chennai-600 078
2. M/s. EDS Instruments & Systems Pvt Ltd, Chennai-600 116
3. M/s. Exhilar Innovative Solutions Pvt Ltd,Chennai-600028.
4. M/s. Rainbow Solutions,Chennai-600 037
5. M/s. RL Technologies Pvt ltd,Chennai-603101

வரப்பெற்ற 5 ஒப்பந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதியான ஒரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை 12.05.2022ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில் அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring System) நிறுவும் பணி | ரூ.46,00,000/- | M/s. RL Technologies Pvt Ltd Chennai | மதிப்பீட்டை விட (0.0004%) குறைவு |

அலுவலகக் குறிப்பு:- வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.011% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. RL Technologies Pvt ltd,Chennai . ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

(ந.க.எண்.0769/2021/இ1)

**தீர்மான எண் : 58-** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்-9:**

தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (NULM ) 2021-22ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.72.92 இலட்சத்தில் விற்பனை வண்டிகள் வாங்கி வழங்கும் பணிக்கான 11.05.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. Dhanshith Trading Agencies,Tiruchirappalli.
2. S.R.Enterprises,Thuraiyur.

வரப்பெற்ற 2 ஒப்பந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதியான ,இரண்டு ஒப்பந்ததாரரின்

ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை 16.05.2022ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் வாங்கி வழங்கும் பணி | ரூ.72,92,000/ | Dhanshith Trading Agencies, Tiruchirappalli. | 72,34,500/– |
| | | | S.R.Enterprises, Thuraiyur | 89,85,000/– |

அலுவலகக் குறிப்பு:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Dhanshith Trading Agencies, Tiruchirappalli. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

(ந.க.எண்.0873/2021/இ1)

**தீர்மான எண் :** 59 –அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–10:</u>**

தேனி மாவட்டத்தில் அரசு சார்பில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் முடிவுற்ற திட்டபணிகளை திறந்து வைக்க 30.04.2022ம் தேதி வருகை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வரவேற்று கீழ்காணும் தினசரி நாளிதழில் 30.04.2022ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் வரப்பெற்றுள்ளது , மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | KAL Publications,Madurai (தமிழ் முரசு) | ரூ.14,700/– |
| 2 | மாலை தமிழகம் | ரூ.14,700/– |

**<u>அலுவலககுறிப்பு</u>**

வ.எண் 1 முதல் 4 வரையிலான விளம்பர நிறுவனங்களுக்கு மேற்காணும் படி விளம்பர கட்டணம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1058 /2022/இ1)

**தீர்மான எண் :** 60 –வ.எண் 1 முதல் 4 வரை என்பது வ.எண் 1 முதல் 2 வரை என திருத்தி வாசிக்கப்பட்டது. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–11:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021–2022–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், வார்டு எண்.2, மயானகரை ரஸ்தாவில் அமைந்துள்ள 12.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring

System) நிறுவும் பணியினை ரூ,46.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கான பணிக்கு 06.05.2022ம் தேதிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினகரன் நாளிதழில் 19.04.2022ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு KAL Publications,Madurai17 நிறுவனத்திற்கு ரூ.11,844/—னை விளம்பர கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 0873/2022/இ1)

**தீர்மான எண் : 61—** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்—12**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்—27519—36/2021/பி2 ,நாள்.30.03.2022ன் படி , நமக்கு நாமே திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சிக்கு, கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **பணிவிபரம்** | **தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | வார்டு எண்—26ல் உள்ள சமுதாய கூடம் புதுப்பிக்கும் பணி | ரூ.10.00/— |

அதன் படி மேற்காணும் பணிக்கு 17.05.2022ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்—26ல் உள்ள சமுதாய கூடம் புதுப்பிக்கும் பணி | ரூ.10,00,000/— | M/S.KMC ASSOCIATES,தேனி. | மதிப்பீட்டை விட (0.04%) குறைவு |
| | | | திரு. முரளிதரன், தேனி. | மதிப்பீட்டை விட (0.12%) கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 0407/2022/இ1)

**தீர்மான எண் : 62—** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி